**பிப்ரவரி – 25**

# TNPSC துளிகள்

- பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதி யோஜனாவை பிப்ரவரி 24-ம் தேதியன்று தமிழ்நாடு முதல்வர் துவக்கி வைத்தார்.
    - இத்திட்டத்தை சென்னை கலைவாணர் அரங்கத்தில் தொடங்கி வைத்து சில விவசாயிகளுக்கு அத்திட்டத்தின் முதல் தவணையான 2000 ரூபாயை அவர் வழங்கினார். இத்திட்டத்தின் போது மத்திய மந்திரி பியூஸ் கோயலும் உடனிருந்தார்.
- உத்திரப் பிரதேசத்தின் கோரக்பூரில் பிப்ரவரி 24-ம் தேதியன்று இடைக்கால நிதி அறிக்கையில் அறிவிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வருடாந்திர நிதி உதவித் தொகையாக 6000 ரூபாய் அளிக்கும் திட்டத்தை பிரதமர் துவங்கி வைத்தார்.
- பிப்ரவரி 22-ம் தேதியன்று சென்னை உயர்நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதியாக நீதிபதி செந்தில் குமார் ராமமூர்த்திக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.
    - இந்த நியமனத்தின் மூலம் உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகளின் எண்ணிக்கை அனுமதிக்கப்பட்ட அளவான 75-ல் 60 என்ற எண்ணிக்கையை எட்டியுள்ளது.
- மத்திய தகவல் ஆணையம், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் இயந்திர மின்னணு வாக்குப்பதிவு இயந்திரமும் ஒரு தகவல் என்று அறிவித்திருக்கின்றது.
    - எனவே தற்போது தேர்தல் ஆணையம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் விலக்கு அளிக்கப்பட்ட விதிமுறைகளின் கீழ் இயந்திர மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தைப் பற்றிய தகவல் அறியும் மனுவின் மீது தகவல் தெரிவிப்பதோ அல்லது மறுப்பதோ கட்டாயமாகின்றது.
- தொழில்நுட்ப சேவைகள் நிறுவனமான டெலாய்ட், இந்தியாவில் 10 மில்லியன் அல்லது 1 கோடி பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு ஒரு பயனுள்ள வேலையைத் தேர்ந்தெடுப்பதற்கு அவர்களை சித்தப்படுத்தும் வேலையில் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சியினை அளிக்கவுள்ளது.
- புதுதில்லியில் நடைபெற்ற சர்வதேச துப்பாக்கிச் சுடும் விளையாட்டுக் கூட்டமைப்பின் போட்டியில் ஆண்களுக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் ஏற்கனவே உள்ள உலக சாதனையைத் தகர்த்த சௌரப் சவுத்ரி முதலிடத்தைப் பிடித்து தங்கப் பதக்கத்தை வென்றார்.
- விலை மலிவான வீடுகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட சிறப்பு வரியான 1 சதவிகிதத்துடன் சேர்த்து தற்சமயம் கட்டுமானத்தில் உள்ள வீடுகளின் மீதான 5 சதவிகித வரியை குறைத்திட ஜிஎஸ்டி குழு முடிவு எடுத்திருக்கின்றது.
    - வீடு கட்டுவதற்குத் தேவையான ஸ்டீல், சிமெண்ட் மற்றும் பெயின்ட் ஆகியவற்றின் மீதான வரிச் சலுகைகள் மூலம் கட்டுமான நிறுவனங்கள் லாபமடைவதாக கூறி அவற்றையும் இக்குழு திரும்பப் பெற்றிருக்கின்றது.
- பீகாரின் பாரவுனியில் பாட்னா மெட்ரோ ரயில் திட்டத்திற்கான அடிக்கல்லை பிரதமர் நாட்டினார்.
- இந்திய வீடு கட்டும் திட்டத்தின் கீழ் இந்தியாவால் இலங்கையில் கட்டப்பட்ட 155 வீடுகள் அந்நாட்டின் தோட்டப் பகுதி குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்கு வழங்கப்பட்டன.

- அரியானாவின் சோனிபட் மாவட்டத்தில் உள்ள கானாவூரில் மூன்று நாட்கள் நடைபெறும் விவசாய தலைமைத்துவ மாநாட்டின் 4-வது பதிப்பு அங்கு திட்டமிடப்பட்டுள்ள சர்வதேச பழங்கள் மற்றும் காய்கறி முனையத்தில் நடைபெற்றது.
- புதுதில்லியில் கால்பந்துப் போட்டியை நடத்தும் டெல்லி கால்பந்து அமைப்பால் முதலாவது கால்பந்து ரத்னா விருது 34 வயதான பத்மஸ்ரீ விருது பெற்ற சுனில் சேத்ரிக்கு வழங்கப்பட்டது.
- இமாச்சலப் பிரதேசம் அம்மாநிலத்தில் இரண்டாவது அலுவல் மொழியாக சமஸ்கிருதத்தை தேர்வு செய்ய 2019 அலுவல் மொழி (திருத்தச் சட்டம்) மசோதாவை நிறைவேற்றியிருக்கின்றது.
- புரோ வாலிபால் லீக்கின் துவக்கப் பதிப்பை காளிகட் ஹீரோஸ் அணியை வீழ்த்தி சென்னை ஸ்பார்ட்டன்ஸ் அணி வென்றுள்ளது.
- தெலுங்கானா அரசாங்கம் நாராயண்பேட் மற்றும் முழுகு என்ற புதிய இரண்டு மாவட்டங்களின் உருவாக்கத்தை அறிவித்துள்ளது. இதன்மூலம் அம்மாநிலத்தில் உள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை 33 ஆக அதிகரித்திருக்கின்றது.
- ஆப்கானிஸ்தானின் இடதுகை சுழற்பந்து வீச்சாளர் ரஷித்கான் சர்வதேச டிவென்டி 20 போட்டிகளில் தொடர்ச்சியான நான்கு பந்துகளில் நான்கு விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் வீரராக உருவெடுத்துள்ளார்.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாடு புதிய குத்தகைச் சட்டம்

- குத்தகைத்தாரர்களும் உரிமையாளர்களுக்கும் இடையேயுள்ள உரிமைகளை சமப்படுத்துவதற்கான ஒரு புதிய குத்தகைச் சட்டத்தை தமிழ்நாடு அரசு அறிமுகம் செய்துள்ளது.
- இது மத்திய குத்தகைச் சட்டத்தின் மாதிரி வடிவை ஒட்டி அமைந்துள்ளது.
- 2017 தமிழ்நாடு நிலவுடைமையாளர்கள் மற்றும் குத்தகைதாரர்களின் பொறுப்பு மற்றும் உரிமை ஒழுங்குமுறைச் சட்டம் என்ற இந்தச் சட்டம் பிரபலமாக வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் என்றறியப்படும் 1960 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகை ஒழுங்குமுறை) சட்டத்திற்குப் பதிலாக அமையும்.
- இந்தச் சட்டத்தின் கீழ் மக்கள் குத்தகைப் பதிவு எண்ணைப் பெற்றிடுவதற்காக www.tenancy.tn.gov.in என்ற பிரத்தியேகமான ஒரு இணையதளத்தையும் முதல்வர் துவக்கி வைத்தார்.

# பொருளாதாரச் செய்திகள்

## ஏற்றுமதி ஊக்குவிப்பு மற்றும் வரி ஏய்ப்புத் தடுப்பு ஆகியவற்றுக்கான 3 பணிக் குழுக்கள்


- மத்திய மறைமுக மற்றும் சுங்க வரி வாரியமானது வர்த்தகத்தை எளிமையாக்கவும், ஏற்றுமதிகளை ஊக்குவிக்கவும், வரி இணக்கமுறைகளை மேம்படுத்தவும் 3 பணிக் குழுக்களை நியமித்திருக்கின்றது.

- இந்த பணிக் குழுக்கள் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கான சிறப்புக் கவனத்துடன் ஏற்றுமதி மேம்பாடு மற்றும் எளிதாக்கல் மீது கவனம் செலுத்த கீழ்க்கண்டவற்றின் மீது செயல்படும்.
  - மின்னணு வர்த்தகம்
  - இந்திய ஏற்றுமதிச் சந்தையில் நிகழும் வர்த்தக ஊக்குவிப்பிற்கான தடைகள்
  - ஏற்றுமதியாளர்களுக்குத் தளவாடச் சேவைகளின் தரத்தை உயர்த்துதல்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## உலகின் முதல் தனியாரால் நிதியளிக்கப்படும் நிலவுத் திட்டம்

- அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள கேப் கனவெரல் விண்வெளி மையத்திலிருந்து ஸ்பேஸ்எக்ஸ் ராக்கெட் மூலம் ஒரு இஸ்ரேலிய விண்கலம் விண்ணிற்குச் செலுத்தப்பட்டு இருக்கின்றது.
- இது நிலவில் தரையிறங்குவதற்காக இரண்டு மாத கால அளவிற்குப் பயணம் செய்யும்.
- தோற்றம் என்ற அர்த்தத்தில் பொருள் கொண்ட ஹீப்ரு வார்த்தையான பெரிஷீட் என்ற பெயரிடப்பட்ட இது துவைக்கும் இயந்திரத்தின் அளவை உடைய ஒரு தானியங்கி தரையிறங்கு வாகனமாகும்.




- ஒருவேளை இத்திட்டம் வெற்றியடைந்ததால், நிலவின் மேற்பரப்பின் மீது கட்டுப்படுத்தப்பட்ட தரையிறக்கத்தை வெற்றிகரமாக மேற்கொண்டிருக்கின்ற ரஷ்யா, அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் பட்டியலில் இஸ்ரேல் இணையும்.

# மாநிலச் செய்திகள்

## தொல்லை தரக்கூடிய இனமாக குரங்கு அறிவிப்பு

- இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள 11 மாவட்டங்களின் 91 வட்டங்கள் மற்றும் துணை வட்டங்களில் அடுத்த ஒரு வருடத்திற்கு குரங்குகள் தொல்லை தரக்கூடிய இனங்களாக (வெர்மின்) மீண்டும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.
- இது தொடர்பாக மத்திய அரசு பிப்ரவரி 14, 2019 அன்று அடுத்த ஒரு வருடத்திற்கு செல்லுபடியாகும் வகையில் ஒரு அறிவிக்கையை வெளியிட்டிருக்கின்றது.
- மனிதர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் வகையிலும் பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் வகையிலும் இந்த குரங்குகள் செயல்படுவதால் அவற்றை தொல்லை தரக்கூடிய உயிரினங்களாக (வெர்மின்) அறிவிப்பது அவசியம் என்று மத்திய அரசு வலியுறுத்துகின்றது.

***<u>வெர்மின் என்பதன் மீதான விளக்கம்</u>***

- வெர்மின் என்பது நோய்களைப் பரப்பக் கூடிய அல்லது பயிர்கள் மற்றும் கால்நடைகளைத் தாக்கி அழிக்கக்கூடிய தொல்லை மிருகங்கள் அல்லது பூச்சியினங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றது.
- இந்தியாவில் 1972 ஆம் ஆண்டு வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் 62-வது பிரிவு வனவிலங்குகளின் ஒரு பட்டியலை வெர்மின் வகை என அறிவித்து அவற்றை வதை செய்வதற்காக மாநில அரசுகள் மத்திய அரசைக் கேட்டுக் கொள்வதற்கு அதிகாரமளிக்கின்றது.
- இவ்வாறான வனவிலங்குகள் அச்சட்டத்தின் ஐந்தாவது பட்டியலில் சேர்க்கப்பட்டு, சட்டத்தின்கீழ் எவ்விதப் பாதுகாப்பும் இன்றி இருக்கும்.

## நீர் பாதுகாப்புத் திட்டத்தின் 2-வது பதிப்பு - குஜராத்

- சுஜலாம் சுபலாம் ஜல் சஞ்சய் அபியான் என்ற குஜராத் மாநில முன்னெடுப்பின் இரண்டாவது பதிப்பினை குஜராத் மாநில முதல்வர் விஜய் ரூபானி துவங்கி வைத்தார்.
- பற்றாக்குறை நேரத்தில் பயன்படுத்துவதற்காக மழைநீர் சேமிப்பு வசதியை அதிகரிக்க பருவமழை தொடங்குவதற்கு முன்பாக அம்மாநிலத்தில் உள்ள நீர்நிலைகளைத் தூர்வாரிட இத்திட்டம் எண்ணுகின்றது.
- இத்திட்டத்தின் முதல் பதிப்பு பல்வேறு நீர் ஆதாரங்களான குளங்கள், அணைகள், தடுப்பு அணைகள் மற்றும் இதர பகுதிகளில் ஏறக்குறைய 11000 லட்சம் கனமீட்டருக்கும் அதிகமான நீர்சேமிப்பு வசதியின் அதிகரிப்பைக் கண்டிருக்கின்றது.

## அசாமில் இரண்டு பட்டுத் திட்டங்கள்

- மத்திய மந்திரி ஸ்மிரிதி இரானி அசாமின் உதல்குரி மாவட்டத்தில் மத்திய ஜவுளித் துறை அமைச்சகத்தின் கீழ் இரண்டு திட்டங்களைத் துவங்கி வைத்தார்.
- இத்திட்டம் எரி என்ற வகையின் பட்டு சாகுபடியின் மூலம் வறுமைக் கோட்டிற்கு கீழ்

உள்ள மக்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு எண்ணுகின்றது.

### *மண்ணிலிருந்து பட்டு என்ற திட்டம்*

- இத்திட்டம் 100 ஹெக்டேர்களில் புதிய எரி என்ற வகை பட்டு வளர்ப்பைத் திட்டமிடுகின்றது. மேலும் இது பட்டுப்பூச்சி வளர்ப்பிற்கு பிந்தைய நடவடிக்கைகளான பட்டு வளர்ப்பு, நூற்பு மற்றும் சுழற்பு போன்ற விவசாயத் துறை நடவடிக்கைகளை மேம்படுத்துகின்றது.

### *எரி பட்டுநூற்புத் தொழிற்சாலை*

- மத்திய பட்டு வாரியத்தின் ஒத்துழைப்புடன் இது நேரடியாக மாநில அரசால் நிறைவேற்றப்படும்.
- எரி பட்டு மேம்பாட்டுத் திட்டம், கோக்ராஜ்ஹாரில் மரவள்ளிக் கிழங்கு சாகுபடியின் மூலம் போடோலாந்து பிராந்தியக் குழுவின் பெண்களுக்கான நீடித்த வாழ்வாதார மேம்பாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்டு இருக்கின்றது.
- இத்திட்டத்தின் நோக்கம் மரவள்ளிக் கிழங்கு சாகுபடியைக் கீழ்க்கண்ட இரு வகையான பயன்களுக்காக உபயோகப்படுத்திக் கொள்வதாகும். அவையாவன
    - வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள பழங்குடியின குடும்பங்களுக்கான மேம்பாட்டிற்காக இக்கிழங்கு உணவிற்காகவும் அதன் இலை வகைகள் எரி என்ற பட்டுப் புழுக்காகவும் பயன்படுத்திக் கொள்ளப் படுதல்.
    - பட்டு வளர்ப்பு மற்றும் பட்டு நூற்புத் துறைக்காகவும் எரி வகை பட்டுப்புழுவின் சிறந்த நன்மைக்காகவும் கிடைக்கக்கூடிய இயற்கை வளங்களைப் பயன்படுத்திக் கொள்தல்.

# விளையாட்டுச் செய்திகள்

## ஒலிம்பிக் விளையாட்டுக்கான தகுதிப் போட்டிகள்

- எப்பொழுது புதுதில்லி அனைத்து பங்கேற்பாளர்களின் அனுமதிக்கு எழுத்துப் பூர்வமாக உறுதியளிக்குமோ அதுவரையில் ஒலிம்பிக் தொடர்பான நிகழ்ச்சிகளை நடத்துவது தொடர்பான அனைத்து இந்திய விண்ணப்பங்களையும் சர்வதேச ஒலிம்பிக் குழுமமானது தற்காலிகமாக ரத்து செய்திருக்கின்றது.
- சர்வதேச துப்பாக்கிச் சுடும் விளையாட்டிற்கான கூட்டமைப்பின் உலகக் கோப்பைத் துப்பாக்கிச் சுடுதல் போட்டிக்கு இரண்டு பாகிஸ்தானிய துப்பாக்கி சுடும் வீரர்கள் பங்கேற்க விசா அனுமதி மறுக்கப்பட்டதற்குப் பிறகு சர்வதேச ஒலிம்பிக் குழுமத்தின் இந்நடவடிக்கையானது எடுக்கப் பட்டிருக்கின்றது.
- மேலும் இது அனைத்து சர்வதேச விளையாட்டுக் கூட்டமைப்புகளையும் இந்தியாவில் போட்டிகளை நடத்த வேண்டாமென்றும் எதிர்கால போட்டிகளுக்காக இந்தியாவிற்கு அனுமதி உரிமைகளை அளிக்க வேண்டாமென்றும் கேட்டுக் கொண்டிருக்கின்றது.

- - - - - - - - - - - - - - -